காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை :- திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப.

ந.க.47088/2007/அ4 நாள். 20.10.2017

பொருள் பொதுப்பணி - காஞ்சிபுரம் மாவட்டம் - மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து பணியிடையில் 04.09.2007 அன்று காலமான திரு.கே.அன்பழகன் என்பவரின் மகள் திருமதி.அ.சுகந்தி த/பெ கே.அன்பழகன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கியது - தனியருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் 11.02.2015 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக

பார்வை
1. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.47088/2007/அ4, நாள். 02.02.2015
2. அரசு ஆணை நிலை எண். 80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ-1) துறை நாள். 02.03.2016
3. தலைமை உதவியாளர் (ஊதியப்பிரிவு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் அலுவல் சாரா குறிப்பு ந.க.12459/2016/ட்டி4, நாள் 17.08.2017.
4. சம்மந்தப்பட்ட ஆவணங்கள்.

**ஆணை :-**

காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகில், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து பணியிடையில் 04.09.2007 அன்று காலமான திரு.கே.அன்பழகன்(லேட்) என்பவரின் மகள் திருமதி.அ.சுகந்தி என்பவருக்கு பார்வை-1ல் காணும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு தனியர் 11.02.2015 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2-ல் காணும் அரசாணையின்படி 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு எந்தவித விதிதளர்வும் (Relaxation of Rules) அரசாணைகளுக்கு விலக்கும் (Exemption of Government Orders) தேவைப்படாத பணியாளர்களின் பணியினை பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 2-ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 3-ல் காணும் மாவட்ட ஆட்சியர் அலுவலக தலைமை உதவியாளர்(ஊதியப்பிரிவு) பரிந்துரையின் பேரிலும், திருமதி.அ.சுகந்தி என்பவருக்கு இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 11.02.2015 முற்பகல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படுகிறது.

ஓம்/-பா.பொன்னையா,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்

//உத்திரவின்படி//

20/10/17

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)

**பெறுநர் :-**
திருமதி.அ.சுகந்தி,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம்.

20/10/17

**நகல் :-** முதன்மை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை -5 மேலான தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
**நகல்:-** தலைமை உதவியாளர்(ஊதியப்பிரிவு....... தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள்மேற்கொண்டு அறிக்கை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
**நகல்:-** அலுவலக மேலாளர்(பொது)/அ4 இருக்கை

Scanned with OKEN Scanner